Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 281

வியாழக்கிழமை
04 செப்ரெம்பர் 2025


ஆவணி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

மேல் நீதிமன்றத்துக்கு

## 18 நீதிபதிகளை நியமித்தார் அநுர

கொழும்பு, செப். 4
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, புதிதாக 18 மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்துள்ளார்.
ஜனாதிபதியின் அலுவலகத்தில் வைத்து அந்த நியமனக் கடிதங்கள் நீதிபதிகளிடம் நேற்று வழங்கப்பட்டன.
விசேட தர நீதித்துறை அதிகாரிகள் 17 பேரும், சட்டமா அதிபர் திணைக் ☞ 11



## செம்மணிப் புதைகுழிக்குள் மேலும் 9 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், செப். 4
அரியாலை - செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்று மேலும் 9 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
அரியாலை - செம்மணிப் ☞ 11

செம்மணியில்

# மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் படுகொலைகளின் சாட்சிகளே!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கள ஆய்வின் அடிப்படையில் பகீர் அறிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 4

**செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 90 வீதத்துக்கும் மேற்பட்ட என்புத்தொகுதிகள், கோரமான படுகொலைகளின் சாட்சியமாகவும் பிரதிபலிப்பாகவும் உள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.** ☞ 11

## மூளையில் குருதிக்கசிவு சிறுவன் பரிதாபச்சாவு!

விரிவு பக்:- 11



முச்சந்தி முரளி

'கச்சதீவுக்கு அநுர போனதை வைச்சே இனிமேல் காலத்தை ஓட்டப்போயினம் போல'

## ரயில் விபத்தில் பெண் சாவு

யாழ்ப்பாணம், செப். 4
யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத் ☞ 11

கச்சதீவு விவகாரத்தில்

## இராஜதந்திர மோதல்கள் இந்தியாவுடன் இல்லை!

### அமைச்சர் விஜயபால தெரிவிப்பு

கொழும்பு, செப். 4
கச்சத்தீவு விவகாரம் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் எவ்வித இராஜதந்திர மோதல்களும் இல்லை என்று பொது மக்கள் பாது ☞ 11

தரம் 5

## புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகின!

கொழும்பு, செப். 4
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியுள்ளன.
2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ☞ 12

## கனரக வாகனப் பயணங்களுக்கு நல்லூர்ப் பிரதேசசபை கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப். 4
போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையிலும், கனரக வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைக் கருத்திற்கொண்டும் நல்லூர் பிரதேசசபையால் சில போக்குவரத் ☞ 11

## பழைய முறைமையில் மாகாணசபைத் தேர்தல்

### விரைவில் நடத்தப்படும் என பிரதி அமைச்சர் உறுதி

கொழும்பு, செப். 4
பழைய முறைமையின் கீழ், மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் ☞ 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4183 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 23 32 48 61 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1250 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 41 50 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0209 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 7 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2289 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 02 10 75 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5941 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 2 3 2 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1971 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 20 60 61 62 |
| விசேட எழுத்து | A |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0516 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 2 8 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 03.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0057 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 15 19 45 |

## 7 ஆண்டுகள் காத்திருப்பின் பின்னர்

# வவுனியாவில் திறக்கப்பட்டது பொருளாதார மத்திய நிலையம்



வவுனியா, செப்.4

வவுனியாவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் 7 வருடங்களின் பின்னர் நேற்று மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டது.

இதில் 50 கடைகள் அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 35 கடைகள்மொத்தசந்தைவியாபாரிகளுக்கும், ஒரு கடை சதொச நிறுவனத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் வவுனியா மாநகரசபை முதல்வர் சு. காண்டீபன், பிரதி அமைச்சர்களான எம்.ஜெயவர்த்தன, உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ. திலகநாதன் ஆகியோரால் நிலையம் வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, 293 மில்லியன் ரூபா செலவில் விசேட பொருளாதார மத்திய நிலையம் 2018ஆம் ஆண்டு வவுனியா மதவுவைத்தகுளத்தில் அமைக்கப்பட்டது.

ஓமந்தையில் அமைப்பதா அல்லது தாண்டிக்குளத்தில் அமைப்பதா என்று அரசியல்வாதிகளுக்கிடையில் ஏற்பட்ட இழுபறிகளுக்கு மத்தியில், மதவுவைத்தகுளத்தில் இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு, ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும், பல்வேறு காரணங்களால் அது இயங்க முடியாத சூழல் காணப்பட்டது.

கட்டுமானத்திலும் பழுதுகள் ஏற்பட்டன. இந்தநிலையில் மீண்டும் திருத்தப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் பாவனைக்காகத் தற்போது திறக்கப்பட்டுள்ளது. (எ-110)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 03.09.2025 | புதன்கிழமை | 0649 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| S | 0 4 9 3 9 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.09.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2915 | O | 09 33 53 57 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.09.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| D | 33 37 70 79 | 5076 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.09.2025 | புதன்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 07 21 34 61 | 4627 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 03.09.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 07 | 08 14 38 48 | 2091 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.09.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 01 04 16 34 | 2741 |

| JAYODA DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.09.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 15 34 41 44 | 2158 |

## துப்பாக்கியை மறைக்கும் காணொலி பொலிஸாரிடம்

கொழும்பு, செப்.4

புதுக்கடை நீதவான் நீதிமன்றில் கணேமுல்ல சஞ்சீவவைச் சுட்டுக்கொல்லப் பயன்படுத்திய துப்பாக்கியை சட்டப்புத்தகத்துக்குள் மறைத்துவைக்கும் காட்சிகள் கொண்ட காணொலி கிடைத்துள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டப்புத்தகத்துக்குள் மறைத்து நீதிமன்றத்துக்குள் கொண்டுவரப்பட்ட துப்பாக்கிமூலம், கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்படுவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் இந்தக்காட்சிகளை ஒளிப்பதிவு செய்த ஒருவர் அதை கெஹெல்பத்தரபத்மேக்கு அனுப்பியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கெஹெல்பத்தர பத்மே இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டு இலங்கை கொண்டுவரப்பட்டுதற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-25-இ)

## போலியான வேலைவாய்ப்பு விளம்பரங்களால் ஏமாறாதீர்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, செப்.4

குறைந்த வேலைக்கு அதிக சம்பளம் வழங்கப்படும் என உறுதியளிக்கும் போலி வேலை மோசடிகள் தொடர்பாக பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு எச்சரித்துள்ளது.

மோசடி செய்பவர்கள் இணைய விளம்பரங்கள்மூலம் தனிநபர்களை குறிவைத்து, பெரும்பாலும்போலி வேலைவாய்ப்புகளுக்கு பதிவுக் கட்டணம் அல்லது வைப்புத்தொகையைக் கோருகின்றனர். இவ்வாறான மோசடிகள் தொடர்பாகப் பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேலை மோசடிகளை எவ்வாறு அடையாளம் கண்டு தவிர்ப்பது என்பது தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக இலங்கை கணினி அவசர தயார்நிலைக்குழு சமூக ஊடகப் பரப்புரை ஒன்றையும் ஆரம்பித்துள்ளது. (எ-இ)

## அண்மைய காலங்களில் நடந்த சர்ச்சைக்குரிய சம்பவங்கள் குற்றப்பத்திரிகை விரைவில்

கொழும்பு, செப்.4

அண்மைய காலங்களில் நடந்த 20க்கும் மேற்பட்ட சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பாக விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தக் குற்றப்பத்திரிகைகளைத் தயாரிப்பதில் விசேட குழுவொன்று ஈடுபட்டுள்ளது என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள உள்ளவர்களில் பல முன்னாள் அமைச்சர்கள், அரச அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர். கடந்த அரசாங்கங்களில் பொதுச்சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுகளும் குற்றப்பத்திரிகைகளில் அடங்கும் என்று சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## தங்கத்தின் விலை தினமும் அதிகரிப்பு

கொழும்பு, செப்.4

தங்க விலையில் நாள்தோறும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு செட்டியார் தெரு தங்கநகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 2 ஆயிரம் ரூபா அதிகரிப்புக் காணப்பட்டநிலையில், நேற்றும் தங்கத்தின் விலை 2 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு நிலவரப்பட்டி நேற்று 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 2 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 2 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவை எதிர்கொள்ள காய்நகர்த்தும் அரசாங்கம்

## மனித உரிமை முன்னேற்றங்கள் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

**கொழும்பு, செப்.4**

**இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான அண்மைக்கால முன்னேற்றங்கள் தொடர்பாகக் கொழும்பைத் தளமாகக்கொண்ட இராஜதந்திரிகளுக்கு வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் விளக்கமளித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சில் இதுதொடர்பான விளக்கக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த விளக்கக்கூட்டத்தில், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை சர்வதேச சமூகம் அங்கீகரித்து ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் கேட்டுக் கொண்டார் என்று வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, சட்டமா அதிபர்துறை, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகளும் இந்த விளக்கக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். (எ-இ)

## ராஜித வாக்குமூலம்

கொழும்பு, செப்.4

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வாக்குமூலம் பெறுவதற்காக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் விசாரணை செய்யப்படும் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கொழும்பு நீதவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய அவரிடம் வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வாக்குமூலம் பெறுவதற்காக சிறை அதிகாரிகளால் ராஜித சேனாரத்ன நேற்றுக்காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (எ-இ)

## ஊடகவியலாளர் வேடமணிந்து ஹரக் கட்டா கொலைத் திட்டம்

### பொலிஸாரால் ஒருவர் கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான ஹரக் கட்டாவை நீதிமன்ற வளாகத்தில் கொலை செய்யத்திட்டமிட்ட குற்றச்சாட்டில் ஒருவர் மேற்கு மாகாண வடக்குக் குற்றத்தடுப்புப் பிரிவுப்பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஊடகவியலாளர் போன்று வேடமிட்டு ஹரக் கட்டாவை நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக்கொல்லத் திட்டமிட்டிருந்தார் என்றும், இந்தக் கொலைத்திட்டம் கெஹெல்பத்தர பத்மேவின் வேண்டுகோளின் பேரில் திட்டமிடப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது. சந்தேக நபரிடமிருந்து எரிந்த நிலையில் ஒரு வீடியோக் கமரா மற்றும் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## பூஜித விடுவிப்பு

கொழும்பு, செப்.4

பொலிஸ் தலைமையகத்தில் மின்தூக்கிப் பராமரிப்பாளர் ஒருவரை அச்சுறுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டில் இருந்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (எ-இ)

## மாளிகாவத்தையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, செப்.4

மாளிகாவத்தையில் நேற்றுத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தநிலையில், அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# பிரியதர்ஷன யாப்பாவுக்கு எதிராகக் குற்றப்பத்திரம்!

கொழும்பு, செப்.4

முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி உட்பட 4 பிரதிவாதிகளுக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று [illegible] பொலிஸார் கொழும்பு [illegible]க்குள்ள நீதவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர். 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், வெள்ள நிவாரணம் வழங்குவதாகக்கூறி கனியவளக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 6.1 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை சட்டவிரோதமாகச் செலவழித்து அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் லியான் வருஷவிதான முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அறிவித்தல் அனுப்பப்படும் போது பிரதிவாதிகள் மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டும் என உத்தரவிட்ட மேலதிக நீதவான், வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்த உத்தரவிட்டார். (எ-இ)




## முழுவியளத்துக்கு உதவாதவருக்கு முன்வரிசை

**த**லை இருக்க வால் ஆடுறது நல்லதுக்கில்லை. அப்பிடி வாலுகள் ஆடினதால அநுரவுக்கும் இப்ப கெட்டபேர் வந்திருக்குது. மண்டைதீவு கிரிக்கெட் கிரவுண்ட்டுக்கு அடிக்கல் நடுகிற நிகழ்ச்சியில முன்வரிசையில இருந்தவையில தையிட்டி விகாராதிபதியும் ஓராள். இதைப் பார்த்து அங்க போன சனங்களுக்குப் பெரும் 'ஷொக்'. முழுவியளத்துக்கே உதவாத இந்தப் பிக்குவை என்னத்துக்கு இஞ்ச கொண்டந்து முன்வரிசையில இருத்தியிருக்கினம் எண்டு தங்களுக்குள்ள சனங்கள் புறுபுறுத்தவை. உண்மையில சனங்கள் சொல்லுறமாதிரி அந்த நிகழ்வுக்கு தையிட்டிப் பிக்கு தேவையில்லாத ஆணிதான். வழக்கமா அரசாங்கத்தின்ர நிகழ்வுகள் நடக்கேக்க எல்லா மதங்களின்ர குருமாரையும் கூப்பிடுறவை. அப்பிடி மண்டைதீவு கிரவுண்ட் அடிக்கல் நடுகிறதுக்கும் யாழ்ப்பாணம், ஆரியகுளம் நாகவிகாரைப் பிக்குவைத்தான் கூப்பிட்டிருந்தவை. ஆனால் எக்ஸ்ட்ராவா இந்தத் தையிட்டிப் பிக்குவை ஏன் கூப்பிட்டவை எண்டதும், சட்டவிரோதமா விகாரை கட்டிக்கொண்டிருக்கிற ஆளை இப்பிடி சபை சந்தியளில முன்னுக்குக் கொண்டந்து இருத்துகினம் எண்டால் தையிட்டி விகாரைக்கு இந்த அரசாங்கமும் சப்போர்ட் பண்ணுதோ எண்டதும் சனத்துக்குப் பிரச்சினைதான்.

ஆனாலும் இதில மேல்மட்டங்களைவிட கீழ்மட்ட வாலுகளின்ர விளையாட்டாலதான் தையிட்டிப் பிக்கு, மண்டைதீவுக்கு வந்தவராம். உண்மையில அவரை முதலில கூப்பிட்டது மயிலிட்டிக்குத்தானாம். அங்க துறைமுக அபிவிருத்தித் திட்டங்களை அநுர ஆரம்பிச்சு வைக்கப் போகேக்க, அங்கையும் மதகுருமார் வாற தெண்டதுதான் பிளானாம். அதுக்கு வரச்சொல்லி ஒவ்வொரு மதகுருமாருக்கும் அழைப்பும் குடுபட்டிருக்கு. மயிலிட்டிக்குக் கிட்ட தையிட்டி இருக்கிறதால, அந்தப் பிக்குவையும் மயிலிட்டிக்கு வரச்சொல்லி அழைப்புக் குடுத்திருக்கினம். இந்த அழைப்புக் குடுக்கிற வேலையை ஆமிக்காரரும், உள்ளூர்த் திசைகாட்டிக்காரரும்தான் பொறுப்பெடுத்தவை, அப்ப அவை தங்கட ஆளை (தையிட்டிப் பிக்குவை) கூப்பிடத்தானே பாப்பினம். ஆனால் மயிலிட்டி நிகழ்வை சிம்பிளாச் செய்யச் சொல்லி மேலிடத்தில இருந்து ஓர்டர் வந்திருக்குது. அதோட ஏற்கனவே தையிட்டிப் பிரச்சினை பத்தியெரிஞ்சு கொண்டிருக்கேக்க, அந்தப் பிக்குவை மயிலிட்டிக்குக் கூப்பிட்டால் நிலைமை இன்னும் சிக்கலாகும் எண்டும் அவைக்குச் சொல்லுப்பட்டிருக்கு.

இப்பிடி ஓர்டர் வந்தவுடன அழைப்புக் குடுத்த ஆக்கள், தையிட்டிப் பிக்குவிட்டப் போய் 'புரோக்கிராமை சிம்பிளாச் செய்யச் சொல்லிட்டினம். நீங்கள் வரத் தேவையில்லை' எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் பிக்கு அதைக் கேக்கிறமாதிரி இல்லை. ஆள் வால்ல நெருப்பைக் கட்டின குரங்குமாதிரி ததிங்கிணத்தோம் ஆடத்தொடங்கிட்டாராம். 'அதெப்பிடி நீங்க வரச்சொன்னால் வா எண்டுறதுக்கும், நிக்கச் சொன்னால் நிக்கிறதுக்கும் என்னை அவ்வளவு கேவலமா நினைக்கிறியளோ? நான் மயிலிட்டிக்கு வந்தே தீருவன்' எண்டு சொல்லியிருக்கிறார். அதுக்குப் பிறகு ஜனாதிபதி செயலகத்தோட கதைக்க, 'மயிலிட்டிக்கு வந்தால்தான் கூடப் பிரச்சினை, மண்டைதீவுக்கு வந்தால் பிரச்சினை அவ்வளவு பெரிசாகாது' எண்டு சொல்லி, அவரை மண்டைதீவுக்கு வரச் சொன்னவையாம். மயிலிட்டி நிகழ்வைவிட மண்டைதீவு நிகழ்வு பெரிசெண்டதால, பிக்குவும் ஓமெண்டிருக்கிறார். அதாலதான் மண்டைதீவு நிகழ்வுக்குத் தேவையே இல்லாத ஆணியா தையிட்டிப்பிக்கு வந்து முன்வரிசையில குந்தினவராம். எண்டாலும் அவரை ஒரு இடத்துக்கும் கூப்பிட்டிருக்கக் கூடாது எண்டதுதான் சனத்தின்ர வாதம். ஆனால் சணம் பித்தம் சணம் வாதம் எண்டு நிக்கிறவை சனத்தின்ர கதையைக் கருத்தில எடுக்கமாட்டினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**துலாம்:** பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி நற்பெயர் எடுப்பீர்கள். ராசிக்கு 11 ஆம் வீட்டில் ராசி அதிபதி செவ்வாய் நிற்பதால் கொடுக்கல் வாங்கல் நல்லபடியாக முடியும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு ஏற்படும்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனம்தேவை.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில்கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

# தேச நலனைக் காத்திட தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேரேறி வருகிறாள்



வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லியூர் துர்க்கையம்மனுக்கு இன்று தேர்

மதுரைகவி காரை.எம்.பி.அருளானந்தம்

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாளின் மஹோற்சவத்தின் சிறப்பு உற்சவமாகிய தேர்த்திருவிழா இன்று அற்புதமாக நடைபெறுகின்றது. பூலோக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்கு சக்தியின் என்னென்ன பகுதிகள், என்னென்ன பாங்கில் அமைந்திருக்கவேண்டும் என்பதை துர்க்காதேவியின் சொரூபம் நன்கு விளக்குகிறது. பிரபஞ்சம் முழுவதிலும் அவள் வியாபித்திருக்கிறாள். எனினும் ஆண்டுக்கொரு தடவை அவள் ஹிமாசலத்திலிருந்து பூமியின் சமவெளிக்கு எழுந்தருளுகிறார் என்பது கோட்பாடு.

### தத்துவமாக வடிவெடுத்தவள் துர்க்காதேவி

புரட்டாசி மாதத்தில்வரும் நவராத்திரி அவளுடைய வருகையைக் குறிக்கிறது. மழை பெய்து ஓய்ந்த பிறகு நிலவுலகெங்கும் சக்தி எழுந்தருளியிருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன. அவள் மண்ணுலகுக்குவரும்பொழுது அவளுடைய அம்சங்களாகிய லஷ்மி, சரஸ்வதி, கணேசன், கார்த்திகேயன் ஆகியவர்கள் அவளுடன் வருகிறார்கள். மண்ணுலகு வாழ்வு மாண்பு பெறுவதற்கு, வாழ்க்கையில் என்னென்ன பகுதிகள் எப்படி அமைந்திருக்கவேண்டும் என்பதைத் துர்க்கையும் அவளுடைய பரிவாரங்களும் சேர்ந்து விளக்குகிறார்கள். வாழ்வு நல்வாழ்வு ஆவதற்கு தனிமனிதன் வாழ்விலும், சமூகத்தின் நடைமுறையிலும் ஆட்சியானது சிறப்புற்றி ருக்கவேண்டும் என்பதைத் துர்க்காதேவி விளக்குகிறாள். திறம்பட அவள் செலுத்துகிற ஆணையை மீறி யாரும் செல்லமுடியாது. உயர்ந்த இராணுவத் தத்துவமாக வடிவெடுத்தவள் என்று துர்க்கையைச் சொல்லலாம்.

### சக்தியின் அனுக்கிரகம் ஆற்றல்மிக்கது

சக்தி எங்கும் நிறைந்தவள் என்பதை அவள் படைத்துள்ள பத்துக்கைகள் விளக்குகின்றன. எட்டுத்திக்குகளில் இருப்பவளும் அவளே! மேலும் கீழும் இருப்பவளும் அவளே! என்பதை விளக்குவதற்குப் பத்துக்கரங்கள் அமைந்திருக்கின்றன. சக்தியின் அனுக்கிரகத்தைக் கொண்டு ஜீவன் வாழ்வு எனும் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்து பரத்தின்பால் செல்லுதல் அதன் குறிக்கோளாகிறது.

பூலோகத்தில் அவதாரப் புருஷர்க ளாகத் தோன்றியவர்களும், தங்களுடைய அரும்பெரும் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு முன்பு சக்தி பூஜை செய்து அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றனர். இராமபிரான் இலங்கைக்குச் செல்லும் முன், துர்க்கை பூஜை செய்ததாகவும், கண்ணபிரான்காத்யாயினி பூஜை செய்ததாகவும் சொல்லப்படுகின்றது. சங்கராச்சாரியார் சாரதா பூஜை பண்ணி அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றார். ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர்கூட, காளியின் வரப்பிரசாதத்தைப் பெற்றார். அந்தந்தக் காலத்துக்கு ஏற்றமுறையில் பூவுலகில் தர்மம் நிலை நிறுத்தப்படுவதும், அகிலாண்ட நாயகியின் திருவுருவப் பாங்கின்படி விளங்குவதும் ஆகும். இவ்வாறான சக்தியின் உதவியை உண்மையில் நாடுபவன் வலுவடைகிறான். இத்தகு பெருமைகளால் துர்க்காதேவி விளங்குகிறாள். இவளே பூலோகத்தில் எழுந்தருளும்போது, தத்துவ விளக்கத்துக்கும் சின்னமாகிறாள். அவள் மஹிஷாசுரமர்த்தினியாக மண்ணுலகில் எழுந்தருளுகிறாள்.

சிங்கத்தின்மீது நின்றுகொண்டு மஹிஷாசுரனை வதம் செய்கிறாள். கன்னங்கரேலென்ற நிறமுடையவளாக நிலத்தில் நிற்கிறாள். அவளுக்குச் சற்று உயரத்தில் மேலே, சிம்மத்தின்மீது நிறை அம்பிகை ஆட்சி புரிகிறாள். அவள் மஞ்சள் மேனியுடையவள்; சிவப்பு வஸ்திரம் அணிந்திருக்கிறாள்; பல்வேறு ஆயுதங்களைக் கையாளுகிறாள். மஹிஷாசுரன் தமோகுணத்தின் பிரதிநிதியாகி றான். துர்க்கை ரஜோகுணத்தின் சின்னமாகிறாள். அம்பிகையின் தலைக்குமேல், சதாசிவம் தூவெ்ன வடிவெடுத்து, ஆழ்ந்த ஆத்ம நிஷ்டையில் இருக்கிறார். இது அவரது வெண்ணிற சத்துவக் குணத்தைக் காட்டுகிறது.

### ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

துர்க்காதேவி தேவஸ்தானத்தைச் சமூகப் பணிகளால் சிறப்படையச் செய்த பெருமாட்டி, சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள், "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற சிந்தனையில் உருவாக்கிய 'துர்க்காபுர மகளிர் இல்லம்' அம்மையாரின் சமுதாயப் பணியில் முதன்மையானது. அன்னை ஆரம்பித்த சமூக, சமய, கலாசாரப் பணிகள் நம் தேசமெங்கும் பரவவேண்டும். தெல்லிப்பழையில் தேரேறும் அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி யின் அருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும்.

### திராவிட மரபுத்தேரில் வருகிறாள்

ஆவணி உத்தரத்தில், அவனியைக் காக்கத் தேரேறுபவள். 05.09.2025 அன்று ஆவணி ஓணத்தில், துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தமாடி திருவருள் தரும் அற்புதம் நடைபெறவுள்ளது.

**வேலையாட்கள் தேவை**

சைவ உணவகம் ஒன்றிற்கு
பின்வரும் வேலையாட்கள் தேவை.

➤ சமையல் உதவியாளர் ➤ சுத்திகரிப்பாளர்
➤ காசாளர் (கணனி)

தொடர்பு: 076 423 6862

## 30 வது பிறந்தநாள் நினைவுகள்

அமரர் சந்திரராசா விதுஜாம்பாள்



இன்று உன் பிறந்த நாள் !
ஆனாலும், உன் முகம் மட்டும் இல்லாமல்,
உன் நினைவுகள் நம்மோடு தொடர்ந்து பேசுகின்றன.

விண்ணில் ஒளிரும் ஒரு நட்சத்திரமாய்,
என்றும் எங்களைத் தேடி வரும் உன் புன்னகை,
இன்னும் இதயத்தின் ஓரங்களில் உயிருடன் தான் இருக்கிறது.

உன் அன்பு, உரையாடல்கள்,
அனைத்து நினைவுகளும் நம் நாள்களில்
தேன் கலந்த நிழலாய் வாழ்கின்றன.

இன்று உன்னை வாழ்த்த முடியாது நேரில்,
ஆனால் மனதின் ஆழத்தில் "பிறந்த நாள் வாழ்த்துகள்" ... என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்.....!

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

இனிமையான பேச்சும் ஒருவிதத்தில் தர்மம் தான்.

நபிகள் நாயகம்

# கச்சதீவும் கச்சிதப்பதிலும்...!


யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அறிவிக்கப்படாத திடீர்ப்பயணமாக கச்சதீவுக்கும் சென்றிருந்தார். யாழ்ப்பாணம் - கிளிநொச்சி முல்லைத்தீவை உள்ளடக்கிய ஜனாதிபதி அநுரவின் இரு நாள்கள் பயணத்தில், அவரால் மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த நகர்வாக கச்சதீவுக்கான பயணத்தைக் கோடிட்டுக் காட்டினால், அது மிகையல்ல. ஏனெனில், கச்சதீவை மையமாக வைத்து இந்தியாவிலும், இலங்கையிலும் அண்மையில் கட்டமைக்கப்படும் அரசியல் மிகப்பெரியது. அத்துடன், ஈழத்தமிழ் மீனவர்கள், வாழ்விழந்து வழியிழந்து வருமானமிழந்து ஏதிலிகளாக ஏங்கித்தவிக்கும் நிலையை ஏற்படுத்தும் சக்தியும் அதற்கு உண்டு.

தமிழகத்தில் தற்போது தேர்தல் காலம். அத்துமீறிய மீன்பிடிக்காக இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையால் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்படும் நிலையில், தென்னிந்தியத் தேர்தல்களையும் அரசியலையும் கச்சதீவை நீக்கிவிட்டுப் பேசிவிடமுடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. நேற்றுக் கட்சி தொடங்கிய தமிழக வெற்றிக்கழகத்தலைவர் விஜய் தொடக்கம் தீவிர இடதுசாரிகளாகவும் கம்யூனிஸ் வாதிகளாகவும் தங்களைக் காண்பித்துக்கொள்வோர்வரை அனைவரினதும் ஒற்றை நிலைப்பாடு கச்சதீவை மீட்கவேண்டும் என்பதே. இந்த விடயத்தை அவர்கள் தங்களின் பரப்புரைகளில் வலுவாக முன்வைக்கின்றனர். இனிவரும் மாதங்களில் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் கச்சதீவுப் பரபரப்பு கனகச்சிதமாக இடம்பெறும்.

தேர்தல் காலங்களில் பேசப்படும் வழக்கமான விடயம் தானே என்று இதைக் கண்டும் காணாமலும் இருந்தால், நாளை இந்த விடயம் பல்கிப் பெருகி பேசுபொருளாகி, இராஜதந்திர வட்டாரங்களால் அணுகப்படவும் வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன. இவ்வாறான பின்னணியில்தான், கச்சதீவுக் கருத்தாடல்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் வகையில், 'என் நிலத்தில் நான்' என்ற தோரணையில், கடற்படையினர் சகிதம் சென்று 'கெத்துக் காட்டியிருக்கின்றார்' அநுர. ஜனாதிபதி அநுரவின் நகர்வை இந்திய ஊடகங்களும்-தென்னிந்திய ஊடகங்களும் பிரதானப்படுத்திச் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அத்துடன், 'ஜனாதிபதி அநுரவின் நகர்வு எதிர்பார்க்கப்படாத ஒன்று. இது இருதரப்பு நல்லுறவுக்கு ஆரோக்கியமானதல்ல' என்று தெரிவித்திருக்கின்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகத் தலைவர் முத்தரசன். ஆக, தமிழகத்தில் வலிந்து ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு கருத்தியலுக்கு, ஜனாதிபதி அநுர எவ்வளவுதூரம் வலுவான பதிலை வழங்கியிருக்கின்றார் என்பது இந்தத் துலங்கல்களில் இருந்து புலனாகின்றது.

அதேநேரம், கச்சதீவுக்குச் சென்றுவருவதால் மட்டும் இந்தக் கருத்தாடல்களை முற்றாக அஸ்தமிக்கச் செய்துவிடலாம் என்று நம்புவது முட்டாள்தனம். கச்சதீவு தொடர்பில் தமிழகத் தலைவர்கள் இனியொருபோதும் உரையாடமுடியாதவாறான நகர்வுகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்னெடுப்பது அவசியம். தமிழகத்தில் இருந்து இலங்கைக்குள் பெருமளவு போதைப்பொருள்கள் ஊடுருவுகின்றன. தமிழகத்தின் கோட்டைப்பட்டினம், தொண்டி, தேவிப்பட்டினம், மண்டபம், இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி ஆகிய கடலெல்லைகளை கச்சதீவில் இருந்து மிக இலகுவாகக் கண்காணிக்க முடியும். எனவே, அங்கு பெரும் தொலைநோக்கிகள் மற்றும் நவீன வசதிகளுடன்கூடிய போதைப்பொருள் கண்காணிப்பு மையத்தை அமைப்பதன்மூலம், இலங்கையின் வடக்குப் பகுதிக்குள் ஊடுருவும் போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதுடன், கடற்படையின் நடமாட்டத்தை அதிகரிக்கவும் முடியும். கச்சதீவு இலங்கையின் முற்றுமுழுதான பயன்பாட்டில் இருக்கும்போதே தேவையற்ற வாதப்பிரதிவாதங்களை முற்றாகத் தவிர்ப்பதற்கு வழியேற்படும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# எச்.ஐ.வி. தொற்றாளர் சடுதியாக அதிகரிப்பு




கொழும்பு, செப்.4

**கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது எச்.ஐ.வி. பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்புப் பதிவாகியுள்ளது என்று அண்மையத் தரவுகள் தெரிவிக்கின்றன.**

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 203 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய பால்வினைநோய் அல்லது எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு காலாண்டில் இனங்காணப்பட்ட அதிக எண்ணிக்கை இதுவாகும். இந்த ஆண்டின் முதல் காலாண்டில் பதிவாகியுள்ள பாதிப்புகளில், 15 முதல் 24 வயது நிரம்பிய 30 ஆண்களும் இரண்டு பெண்களும் அடங்குவர். மீதமுள்ளவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள். அத்துடன் எச்.ஐ.வி. தொற்றுடன் தொடர்புடைய 10 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. 2024 ஆம் ஆண்டில்எச்.ஐ.வி. தொற்றுடன் தொடர்புடைய 47 உயிரிழப்புகள் பதிவாகியிருந்தன. (எ-இ)

## சுற்றுலாத்துறையை மேம்படுத்தச் செயலணி

கொழும்பு, செப்.4


சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காகச்செயலணி ஒன்றை நிறுவுவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதையும், நாட்டின் பொருளாதாரத்துக்கு நேரடி வருவாய் வளர்ச்சியை அடைவதையும் நோக்காகக் கொண்டு இந்தச் செயலணி நிறுவப்படவுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இந்தச் செயலணி மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பான முடிவுகளை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## கடந்த 8 மாதங்களில் 36,708 பேருக்கு டெங்கு

கொழும்பு, செப்.4

கடந்த 8 மாதங்களில் மட்டும் 36 ஆயிரத்து 708 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த மாதத்தில் 2 ஆயிரத்து 749 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்த ஆண்டில் டெங்குத் தொற்றால் 19 பேர் உயிரிழந்துள்ளனர். டெங்கு மற்றும் சிக்குன்குனியா தொற்றுகள் தற்போது அதிகம் பரவிவருகின்றன. யாருக்கேனும் காய்ச்சல் காணப்பட்டால் அவர்கள் பெரசிட்டமோல் மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். டெங்குத் தொற்றுக்குள்ளானவர் பிற வலிநிவாரணிகளை உட்கொண்டால் அது உட்புற இரத்தப்போக்குக்கு வழிவகுக்கும். மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவச்சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ-இ)



## 159 ஆண்டுகளை நிறைவுசெய்த இலங்கைப் பொலிஸ்

கொழும்பு, செப்.4

இலங்கைப் பொலிஸின் 159ஆவது ஆண்டு நிறைவுதினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

இலங்கையில் முதல் பொலிஸ் நிலையம் 1866ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி நிறுவப்பட்டு, ஜி. டபிள்யூ. ஆர்.கேம்பல் முதல் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இந்தத் திகதி இலங்கைப் பொலிஸின் ஸ்தாபக நாளாகக் கருதப்படுகிறது.

இதை நினைவுகூரும் வகையில்,நேற்று பொலிஸ் களப்படை தலைமையகத்தில் விசேட விழா ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. பொலிஸ் மரியாதை அணிவகுப்பு மற்றும் சேவையில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வுகள் அதில் இடம்பெற்றன. (எ-இ)

நாளை வெள்ளிக்கிழமை - ஆவணி 20
05.09.2025
சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவும் தமிழருக்கு நீதி தரார் சர்வதேச நீதிமன்றே ஒரே தீர்வு



## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.4**

**இலங்கையில் தமிழருக்கு எந்த அரசாங்கத்தாலும் தீர்வு கிடைக்கப்போவதில்லை. தமிழர் பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவதே ஒரே தீர்வு என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். செம்மணியில் இடம்பெற்ற வன்மம் நூல் வெளியீட்டு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- செம்மணி மனிதப்புதைகுழி, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பெரும் இனப்படுகொலையின் சாட்சியாக விளங்குகின்றது. கடந்த அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் செயற்படுகின்றது. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் என்பன தொடர்பில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்காமல் தொடர்ச்சியாகப் பாதுகாத்துவருகின்றது. யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி, செம்மணியைப் பார்வையிடாமல் சென்றது, பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியின் வடிவமாகவே பார்க்கவேண்டியுள்ளது. 70 வருடங்களாக ஆட்சிசெய்த அரசாங்கங்கள் எதைச் செய்தார்களோ அவற்றையே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பின்பற்றிவருகின்றது - என்றார். (எ-20)

# கச்சத்தீவை கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை

## அமைச்சர் லால் காந்த

கொழும்பு, செப்.4

கச்சதீவு இலங்கைக்குரியது, அதை நாம் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார். கண்டியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தென்னிந்திய அரசியல்வாதிகள் அரசியல் இலாபத்துக்காக ஒரு சில கருத்துகளை வெளியிடமுடியும். அதில் ஒன்றுதான் கச்சதீவு தொடர்பான கருத்துகள். கச்சத்தீவு இலங்கைக்குரியது. தமிழ்நாட்டு வாக்காளர்களை உற்சாகப்படுத்த அவர்கள் கூறும் கதைகளுக்கு நாம் குழம்பிக்கொள்ளத் தேவையில்லை-என்றார். (எ-25-இ)

# படையினரை வேட்டையாட ஜெனிவாவில் பெரும் சூழ்ச்சி

*ரோஹன விஜேவீரவின் மகன் எச்சரிக்கை*

கொழும்பு, செப்.4

படையினரை வேட்டையாடுவதற்கு ஜெனிவாவில் பெரும் சூழ்ச்சி நடக்கின்றது. தற்போதைய அரசாங்கம் அதற்குள் சிக்கிவிடாது முன்னெச்சரிக்கையாகச் செயற்படவேண்டும் என்று ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹன விஜேவீரவின் மகன் உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

யானை-புலி ஒப்பந்தத்தைத் தோற்கடித்து, நாட்டை மீட்பதற்காக 2005ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி. கூட்டணி வைத்தது. தற்போது ஜெனிவாவில் படையினரை வேட்டையாடுவதற்கு சூழ்ச்சி நடக்கின்றது. இது பிரிவினைவாதக் குழுக்க ளின் தேவைப்பாடு. இதற்காக ஜெனிவாவில் மரணப்பொறி வகுக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நாட்டுமக்கள் நிராகரித்துள்ளனர். ஜெனிவாப் பொறிக்குள் சிக்கிவிடக்கூடாது என்று ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சரிடம் கோருகின்றோம். அதை வலியுறுத்தி மக்களிடம் கையொப்பம் திரட்டப்படுகின்றது. அந்த மனு நாளை வெளிவிவகார அமைச்சரிடம் கையளிக்கப்படும் - என்றார். (எ-44)

# டயஸ்போராவைத் திருப்திப்படுத்துவதே தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு!


## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு,செப்.4

நல்லாட்சிக் காலத்தைப் போன்று படையினரை வேட்டையாடி டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்தும் நிலைப்பாட்டிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார். மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

படையினரை வேட்டையாடுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கின்றது. இதன் ஆரம்பமாக முன்னாள் கடற்படைத் தளபதி இலக்குவைக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் முடிவுகளை எடுக்கும்போது தாக்கங்கள் ஏற்படக்கூடும். இதை மகாநாயக்க தேரர்களுக்குத் தெளிவுபடுத்தினோம்.

டயஸ்போராக்களின் தேவைக்காக புலிகளை நினைவுகூருவதற்கு வடக்கில் இடமளிக்கப்படுகின்றது. இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. மறுபுறத்தில் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றது. நல்லாட்சிக் காலத்தைப் போன்று படையினரை வேட்டையாடி டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்தும் நிலையிலேயே இந்த அரசாங்கமும் உள்ளது -என்றார். (எ-44)



# முப்படையினர் பாதுகாப்பில் அரசின் அவதானம் அவசியம்

## எச்சரிக்கிறார் எல்லே தேரர்

கொழும்பு,செப்.4

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின்போது, படையினரைக் காட்டிக்கொடுப்பதற்குரிய சூழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதனால் முப்படையினர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மனித உரிமைகள் பற்றி எமக்குப் போதிப்பதற்கு வெள்ளையர்களால் முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. தண்ணீர்க் கோப்பையில் எறும்பொன்று இருந்தால்கூட அதைப் பாதுகாப்பாக எடுத்துக்காக்கும் இனம் நாம். அறுவடை செய்யும்போது பறவைகளுக்காக ஒரு தொகை நெல் வயல்களில் வைக்கப்படும். மிருகங்கள், பறவைகளைக்கூட நேசித்த இனம் நாம். அதனால் மனித உரிமைகள் தொடர்பில் எமக்கு உபதேசம் அவசியமில்லை. இந்த ஆட்சியில் உள்ள பலர் தேசப்பற்றுள்ள இயக்கங்களில் இருந்தவர்கள். எனவே, முப்படையினர் தொடர்பில் நாம் கூறிய கருத்துகள் செவிமடுக்கப்படவேண்டும்- என்றார். (எ-44)

# இனப்படுகொலையின் பங்காளியிடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்ப்பதா?

## கஜேந்திரன் கேள்வி

யாழ்ப்பாணம், செப்.4

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அத்தனை படுகொலைச் சம்பவங்களுக்கும், பங்காளிகளாகச் செயற்பட்டவர் அநுர. அப்படிப்பட்டவரிடம், தமிழ் மக்கள் எவ்வாறு நீதியை எதிர்பார்க்கமுடியும்? என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

செம்மணியில் இடம்பெற்ற வன்மம் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்ட அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரித்துள்ளதாவது 1996 ஆம் ஆண்டு சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது, தமிழ் மக்களுக்கு எதிராக செம்மணிப் படுகொலை உட்பட பல்வேறு படுகொலைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டன. அந்தக் காலத்தில் சந்திரிகா அரசாங்கத்தைப் பாதுகாத்த ஜே.வி.பி, தற்போது தேசிய மக்கள் சக்தியாக மாறியுள்ளது.

வலி.வடக்கில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றி, காணியை மக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று ஜனாதிபதி தலைமையிலான முதலாவது கூட்டத்தில் எமது கட்சித் தலைவர் கோரிக்கை முன்வைத்தார். ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நெருங்கும் நிலையில், யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி தமிழ் மக்கள் எதிர்பார்த்த எந்த ஒரு விடயங்களையும் செய்யவில்லை. மயிலிட்டித் துறைமுக நிகழ்வுக்கு மதத்தலைவர்களைப் புறக்கணித்ததன்மூலம், பௌத்த சிங்களப் பேரினவாதம்தான் தமது கொள்கை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழ் மக்களை ஏமாற்றும் வகையிலேயே அநுர யாழ்ப்பாணம் வந்துள்ளார். இனியும் தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது - என்றார். (எ-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் உடற்பயிற்சிப் போட்டியில் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி சம்பியன்





யாழ்ப்பாணம், செப்.4

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் தேசிய மட்ட பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (எ-25)

# கால்பந்தாட்ட தேசிய அணிக்கு மன்னாரிலிருந்து இரு வீரர்கள்



மன்னார்,செப்.4

இலங்கை உதைபந்தாட்ட 16 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கு மன்னாரிலிருந்து இரண்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான என்.கெஸ்ரோன், கே.ஜெனிஸ்ரன் ஆகியோரே தேசிய அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் பங்குபற்றும் முதலாவது சர்வதேச உதை பந்தாட்டப் போட்டி, சீனாவில் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாணவர்கள் இருவரும் நெருக்கடியான பொருளாதார நிலைமையில் தமது கல்வியைத் தொடர்கின்றனர். எனவே மாணவர்களது மேலதிக பயிற்சிக்கான செலவையும், சீனப்பயணத்துக்கான செலவையும் நலன்விரும்பிகள் தந்துதவ வேண்டும் என்று பாடசாலை சமூகம் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-56)

# கலை இலக்கியப்போட்டியில் பளை மாணவர்கள் சாதனை







யாழ்ப்பாணம், செப்.4

கலாசார அலுவல்கள் திணைக்களத் தால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் பச்சிலைப் பள்ளிப்பிரதேசத்தைச்சேர்ந்த மாணவர்கள் மூவர் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுச் சாதனைபடைத்துள்ளனர்.

சிறுவர் பிரிவு கையெழுத்துப் போட்டியில் மாசார் அ.த.க. பாடசாலை மாணவி உதய பவன் அஸ்மிதா முதலாம் இடத்தையும், சிரேஷ்ட பிரிவு பாடல் நயத்தல் போட்டியில் மாசார் அ.த.க. பாடசாலை மாணவி தினேஸ் சாளினி 2ஆம் இடத்தையும், அதி சிரேஷ்ட பிரிவு பாடல் நயத்தல் போட்டியில் பளை மத்திய கல்லூரி மாணவன் ஆன்சன் நேரியோ அபினாஸ் 2ஆம் இடத்தையும் பெற்று சாதனைபடைத்துள்ளனர். (எ-25.9)

## மரண அறிவித்தல்

### திருமதி. இதயகேஸ்வரி பூபாலசிங்கம்



அச்சுவேலி பத்தமேனியை பிறப்பிடமாகவும், இல. 48 ஒடை லேன், ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாக கொண்ட திருமதி இதயகேஸ்வரி பூபாலசிங்கம் (31.08.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரை ஐயா, பரமேஸ்வரி தம்பதிகளின் மகளும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற மலரயிதன் அவர்களின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம் பூபாலசிங்கத்தின் மனைவியாவார். அன்னார் அஜந்தா, ரமேஷன், பிரதீபன், முகுந்தன், கௌதமன், கௌசிக்காவின் அன்புத் தாயாரும், நந்தசீலன், சுபாஷினி, மிதுனா, சுந்தரேசன், சஜிகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

மதுரா, பிரவீன், இஷான், இஷாரா, ஆறன், நித்தேஷ், அனிஷ், தியான், ஆருஷன், அகர்ஷியா, ஆறவ், அஷ்விக், அஷ்மிரா ஆகியோரின் அன்பு பேத்தியார் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 05.09.25 வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி முதல் 3 மணி வரை இடம்பெற்று, கோம்பையன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

021 222 7562

தகவல் :
குடும்பத்தினர்

## கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் திணைக்களம் - வடக்கு மாகாணம்

### பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட கட்டடப் பொருட்கள் விற்பனை

1. மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம் சார்பாக தவிசாளர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம் அவர்கள் திணைக்களத்தின் பாவனையிலிருந்த பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட கட்டடப் பொருட்களினை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோருகின்றார்.

விற்பனைக்காக சான்றுபடுத்தப்பட்ட பொருட்களின் தரவுகள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| தொகுதி இல. | பொருள் வகைகளின் எண்ணிக்கை | பொருட்களின் வகைகள் | கேள்வி பிணைப்பணம் | கேள்வி ஆவணங்கள் வழங்கல் | கேள்விதாரர்களுக்கான முன்னாயத்த கூட்டம் | கேள்வி ஆவணங்கள் மூடுதல் / திறத்தல் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01-28 | Electrical Items | ரூபா.350.00 | 04.09.2025 - 24.09.2025 | 18.09.2025 10.30 மு.ப | 25.09.2025 11.00 மு.ப |
| 02 | 01 - 15 | Plumbing Items | ரூபா.200.00 | | | |
| 03 | 01-10 | Iron Items& Aluminium | ரூபா.900.00 | | | |
| 04 | 01-02 | Paving Block | ரூபா.200.00 | | | |
| 05 | 01-91 | Roof timber | ரூபா.7,000.00 | | | |
| 06 | 01-32 | Carpentry Work Furniture | ரூபா.3,500.00 | | | |
| 07 | 01-10 | Roof Covering Material | ரூபா.2,300.00 | | | |

2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழி மூலமான கேள்வி ஆவணத்தினை எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 2,000/= இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 04.09.2025ம் திகதி தொடக்கம் 24.09.2025ம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரையான காலப்பகுதியில் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம்,கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம், எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்
4. கேள்விதாரர்கள் மேற்குறித்த பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட கட்டடப் பொருட்களினை அலுவலக நாட்களில் 04.09.2025ம் திகதி தொடக்கம் 24.09.2025ம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம், எனும் முகவரியில் பார்வையிடலாம்.
5. ஒரு கேள்விதாரர் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பொருட்தொகுதி இலக்கங்களுக்கு விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு பொருட்தொகுதியினையும் தனித்தனி ஒப்பந்தமாக கருதப்படுவதோடு, அவற்றிற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களும் தனித்தனி ஒப்பந்தமாக கருதப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.
6. கேள்விதாரர்கள் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு பணத்தினை மேலுள்ள அட்டவணையிலுள்ள 01-07 வரையான பொருட் தொகுதியிற்கு கேள்விப்பிணை முறியாக (Bid Security Bond) கேள்வி ஆவணத்தில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணைப் பணத்தினை (Bid Security) மீளளிக்கக்கூடிய வைப்பாக மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பணமாக செலுத்துதல் வேண்டும்.கேள்வி பிணை முறியினது காலாவதி திகதி 11.12.2025 ஆகும்.
7. மூடியகேள்வி ஆவணங்கள்(மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட கட்டடப் பொருட்கள் விற்பனை" என குறிப்பிட்டு 25.09.2025ம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், திணைக்கள பெறுகைக்குழு, கட்டடங்கள் திணைக்களம்,கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கட்டடங்கள் திணைக்களம் வடமாகாணத்தின் கேட்போர் கூடத்தில் காணப்படும் பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

தவிசாளர், திணைக்கள பெறுகைக்குழு,
கட்டடங்கள் திணைக்களம் வடமாகாணம் கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றாடல்சார் செயற்பாட்டுக்காக ஜனாதிபதி விருது பெற்ற நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (எ-25,17)

# மின்சாரசபை துண்டாடல்; நாட்டுக்கு ஆபத்துத் தரும்!

## பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, செப். 4**

**மின்சாரசபையைப் பல நிறுவனங்களாகப் பிரிக்கும் அரசின் செயன்முறையால், ஊழியர்கள் மத்தியில் நிச்சயமற்ற மற்றும் ஆபத்தான சூழலை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை மின்சாரசபைப் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

குறிப்பாக, மின்சாரசபையின் தொழில்நுட்ப ஊழியர்கள் பலர், விருப்ப ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு நாட்டை விட்டு வெளியேறக்கூடும். இதன் காரணமாக, மின்சார சபைக்கு மட்டுமே பிரத்தியேக மான பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத ஒரு சூழல் ஏற்படும். இது பெரும் ஆபத்தானது.

நிறுவன நிர்வாகத்தில் காணப்படும் நிச்சயமற்ற மற்றும் ஆபத்தான சூழல் காரணமாக, குறைந்தளவு இழப்பீடு பெற்றுக்கொண்டு பலர் முன்கூட்டியே மின்சாரசபை யைவிட்டு வெளியேறக்கூடும்.

கடந்த மூன்று வருடங்களில் 226 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், இவ்வாறான சூழலில் மேலும் பலர் வெளியேறினால் மின்சாரசபை என்ன நிலைமையை எதிர்கொள்ள நேரிடும்.

குறிப்பாக, சிறப்புத் திறமைகள் கொண்ட அனுபவம் வாய்ந்த நபர்களைத் தக்கவைத்துக்கொள்ள முடியாததால், எதிர்காலத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் அதனைச் சீர்செய்ய அதிக சிரமமும், நேரமும், செலவும் ஏற்படும் எனவும் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# பிரபல பாடகர் மதுவா வெடிபொருளுடன் கைது

கொழும்பு, செப்.4

சில நாள்களுக்கு முன்பு போலித் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட பிரபல பாடகர் மதுவா எனப்படும் மாதவ பிரசாத், மீண்டும் வெடிபொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மூன்று ஜெலிக்னைட் குச்சிகள், 5 டெட்டனேட்டர்கள் மற்றும் 3.5 கிலோ அமோனியா நைட்ரேட் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன என்று கஹதுடுவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் கடந்த 25ஆம் திகதி போலித் துப்பாக்கியு டன் கைதுசெய்யப்பட்டு, கெஸ்பேவ நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் கஹதுடுவப் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிடிபன, கலஹேனப் பகுதியிலுள்ள வீடொன்றின் பின்னால் சந்தேகநபர் வெடி பொருள்களை மறைத்துவைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அரச நிறுவனங்களுக்கு வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, செப். 4

அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அரச நிறுவனத் தலைவர்களுக்காக 2 ஆயிரம் கப் ரக வாகனங்களை இறக்குமதிசெய்யத் திட்டமிட்டுள்ளதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடிமட்ட அளவில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த, மாகாண அரச நிறுவனங்களின் தலைவர்கள் கிராமங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கவேண்டும்.

அதிகாரிகள் அங்கு சென்று திரும்புவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கவேண்டும். செயற்படாத உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை மீண்டும் செயற்படுத்த பல புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களின் வறுமையை ஒழிக்க பல்வேறு திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார். (ச-இ)

# பிணவறையில் இருந்த சிசுவின் சடலம் மாயம்

கொழும்பு, செப்.4

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிணவறை யில் வைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலம் காணாமற் போயுள்ளது என்று மருதானைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாளிகாவத்தை ரயில் முனையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் ஒன்றின் மூன்றாம் வகுப்புப் பெட்டியிலுள்ள கழிப்பறையிலிருந்து கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி சிசுவின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. உயிரிழந்த சிசுவின் வயது சுமார் மூன்று நாள்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது.

தெமட்டகொடை பொலிஸார் இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், நீதவானின் உத்தரவின் பேரில், குழந்தையின் சடலம் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிணவறை யில் வைக்கப்பட்டது. கடந்த 29ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் தெமட்டகொட பொலிஸ் நிலைய அதிகாரிகள் கொழும்பு தேசிய மருத்துவமனை பிணவறைக்குச் சென்று, குழந்தையின் சடலம் தொடர்பில் விசாரித்த போது, சடலம் காணாமற்போயுள்ளமை தெரியவந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-25-இ)


## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபை நிதி - 2025

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விக்கான விலைமனுக்கள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்கள் கொள்வனவிற்காக கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2025.09.04 திகதியிலிருந்து 2025.09.17 ம் திகதி வரை மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் அலுவலகத்தில் 04.09.2025 ஆம் திகதியிலிருந்து 17.09.2025 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், எனும் முகவரிக்கு 18.09.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவஉகளது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

07. கேள்வியானது கேள்வி சமஉப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்கள் (20.11.2025) வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி முன்னாயத்த கூட்டம் 10.09.2025 (புதன்கிழமை) மு.ப 11.00 மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(10) /Street Light/2025 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் | 3. 5 | வடக்கு மாகாண சபை / மாவட்ட செயலகம் / நல்லூர் பிரதேச சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 60,000.00 | 18.12.2025 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை**
**கொக்குவில்**

(CR 45985) E

**2025.09.04**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Municipal Council - Jaffna

**NOTICE OF EXTENSION TO CLOSING DATE**

**Bids for Supply of Security Service for Municipal Council Jaffna**

**JMC/PMD/PO1/MSO/Sec.Ser/2025 - 2026**

Further to the paper advertisement dated 21st Aug 2025 on above bid, it is hereby informed that the closing date of the Bid has been amended as follows;

Closing date of issuing bidding documents - Up to 14:00 hours on 11th Sep 2025

Closing date of the bid - on or before 14.00 hrs. on 12th Sep 2025. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders

Other details given in the paper advertisement on the above subject dated 21 Aug 2025 will remain changed.

Bidders may obtain further information from the Procurement Management Division, Municipal Council - Jaffna Through 021 222 8874/021 221 7691.

**Chairman.**
**Regional Procurement Committee,**
**Municipal Council - Jaffna**

(CS 58599)E

## சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச.நவநீதனின் "விருத்த குமார பாலபுராண படலம் எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**

எமது சங்கத்தின் 60வது ஆண்டு விழா தொடர்பான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணியளவில் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது. **அங்கத்தவர்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு வருகைதந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

**இணைச் செயலாளர்**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

**மானிப்பாய் உடுவில் பிரதான வீதியில் 5 1/2 பரப்பு காணி, வீடு உடன் விற்பனைக்கு உண்டு.**

உரிமையாளர்:- **076 322 5545**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
**25.11.1960**



**மறைவு**
**15.09.2024**

**அமரர் இராஜரட்ணம் ஆனந்தகுமாரசுவாமி (ஜெயா)**

திதி - துவாதசி (04.09.2025) வியாழக்கிழமை


அன்பாய் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி விகடமாய் பேசி
எமையெல்லாம் மகிழ்வித்துவிட்டு
எங்கு சென்றீர்கள் அப்பா
ஓர் ஆண்டு என்ன ஆண்டுகள் பல
சென்றாலும் என்றும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது

**"மலரகம்" கொட்டக்காட்டு வீதி**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்**

(CS 59132) E

## 4 ஆம் மாத நினைவஞ்சலி

**தோற்றம்**
**16.04.1967**



**மறைவு**
**09.05.2025**


**அமரர் சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா**
**(சிறி மாஸ்ரர்)**

அன்பான சகோதரரனே
மாதம் நான்கு சென்றது இன்றுவரை புரியவிலை
ஈகையுடன் வாழ்ந்தரே - நீரே
உரிமையுடன் வாழ வழிகாட்டியவரும் நீரே
ஊருக்கெல்லாம் உறவாகி எல்லோரையும் ஆளாக்கியவரே
ஏற்றமுடன் வாழவென ஐயமும் கரைந்தீரே
ஒருவரையும் பகைக்காமல் ஓர்மையாய் வாழவைத்தீரே
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**03 . 04 . 1950**



**மறைவு**
**02 . 09 . 2025**

### திருமதி வியாழம்மா சின்னத்துரை

யாழ். கரம்பொனைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும், யாழ். கரம்பொனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வியாழம்மா சின்னத்துரை அவர்கள் கடந்த (02.09.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், மனோகௌரி, மணிமேகலை, ரஞ்சனிதேவி, பாஸ்கரன் ஆகியோரின் [illegible] பாசமிகு தாயாரும், சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற அருட்[illegible]செல்வன், மற்றும் கணேசவேல், சரண்யா ஆகியோரின் அன்[illegible]அன்பு மாமியாரும், கிதுஷியன், நிதுஷன், கிஜேவ், சௌமிதி, பரோன்[illegible] ஷானியா, அரோன், அனயா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோட்டைவாசல் கரம்பொன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கரம்பொன் கிழக்கு,**
**காளிகோவிலடி,**
**ஊர்காவற்துறை.**

**பாஸ்கரன் (மகன்) +447572362290**
**மனோ (மகள்) +94776681981**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

**மலர்வு**
**21 . 02 . 1956**



**உதிர்வு**
**06 . 08 . 2025**

### அமரர் திருநாவுக்கரசு சுந்தரலிங்கம்

**(முன்னாள் தலைவர், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கம், யா.மா.நு.கூ சங்கம் மற்றும் யா.மா.கூ.கிராமிய வங்கிகளின் சமாசம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர்)**

மாதம் ஒன்று கடந்தே போனாலும்,
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
என்றுமே வாழும் அப்பா...
நீங்கள் விதைத்த அன்பு, எங்கள்
வாழ்வில் வளர்கின்றது...
உங்கள் குரலும், சிரிப்பும் எங்கள்
காதுகளில் இன்றும் [illegible]
[illegible] ஒலிக்கின்றது.
நீங்கள் பதித்த பாதச்சுவடுகள், எங்கள்
வழிகாட்டியாக இருக்கின்றது...
அப்பா, நீங்கள் காட்டிய வழியில்
உங்கள் நினைவுகளை சுமந்தவண்ணம்
தொடர்ந்து பயணிப்போம் நாம்...

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (03.09.2025) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (05.09.2025) வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து 12 மணியளவில் மதிய போசன நிகழ்வும் அவரது இல்லத்திற்கு அருகிலுள்ள இல 84, ஐயனார் கோவில் வீதி, தட்டாதெருச் சந்தி என்னும் முகவரியிலுள்ள "ஸ்ரீ லக்ஷமி பிளாசா" மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**


**19/1 ஒடை லேன்,**
**வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்**

**075 271 9793 (மகள்)**
**077 731 1131 (மகன்)**

(CS 59304) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை தனபாலசூரியர்

**(கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தனபாலசூரியர் அவர்கள் கடந்த (01.09.2025) திங்கட்கிழமை காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-விசாலாட்சி தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-மரகதம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமி அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்ற வர்களான ரஜந்தன், குழலி மற்றும் வகிந்தன், மைதிலி, நிஜாந்தன், நர்மதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராதிகா, பிரபாகரன், கீதாகௌரி, பரந்தாமன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும், லோகநாதன், கேசவராணி, புஷ்பராணி காலஞ்சென்ற புஷ்பராசா மற்றும் புவனராணி, எம்.பி.நாதன், பத்மராணி, திலகராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துர்க்கா, திவ்யா, நீரன், ஜஸ்வன், திரிஸ்ரன், இலக்கியா, ராதை, கிஷோர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2025) வியாழக்கிழமை இல.5 வேலப்பர் ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.5 வேலப்பர் ஒழுங்கை,**
**கனகரட்ணம் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 996 1924**

# செயற்பட்டு மகிழ்வோம்


யாழ்ப்பாணம், செப்.4

இணுவில் பொதுநூலகம் சிறுவர் திறன்விருத்தி மையத்தின் ஏற்பாட்டில் "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வு இணுவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசனும், சிறப்பு விருந்தினர்களாக இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி சுகுணா சீனிவாசகம், ஹற்றன் நஷனல்வங்கி முன்னாள் உத்தியோகத்தர் திருமதி குமுதினி புஸ்கரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக அ.நித்தியானந்தன், அ.பகீரதன், திருமதி புவனேஸ்வரி குமரகுருபரன், ஐ.சிவசுப்பிரமணியம், தி.முகுந்தன், ஸ்ரீ.கஜாசனன், பா.உருத்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு கனடாவில் வசிக்கும் ஞானமணி திருநாவுக்கரசு குடும்பத்தினர் அனுசரணை வழங்கவுள்ளனர்.

(எ-25)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



கடந்த 15.09.2024 அன்று
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

## கதிர்காமு செல்வரத்தினம்

(திதி : துவாதசி)

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய - தெய்வமே
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன் ?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஓராண்டு உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது
துவண்டு நிற்கின்றோம்.

பிறப்பு 17.12.1946 இறப்பு 15.09.2024

சிவன்கோவிலடி
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CR/45986) J-1


# மரண அறிவித்தல்

**தோற்றம் 19.08.1941**

## பொன்னுத்துரை சோமசூரியசிங்கம்

**(சிங்கம்ஸ் பார்மஸி உரிமையாளர்)**

**மறைவு 02.09.2025**



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கம்ஸ் பார்மஸி உரிமையாளராகிய பொன்னுத்துரை சோமசூரிய சிங்கம் நேற்று முன்தினம் (02.09.2025) செவ்வாய்க்கிழமை எல்லாம் வல்ல சிவப் பரம்பொருளின் திருவடிகளில் இளைப்பாறினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Malaysian Pensioneer சண்முகம் பிள்ளை பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதியரின் மகனும், பரம்பரை வைத்தியர் (விஷகடி வைத்தியர்) செல்லப்பா துரைராசா - பார்வதிப் பிள்ளை தம்பதியரின் மருமகனும், வரதலக்ஷ்மி (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்) அவர்களின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன் (Chartered Accountant - JA Partners), ஜனித்திரா (நாட்டியகலைமணி), காண்டீபன் (Accountant - Ireland), செந்தூரன் (ஊடகவியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிராமி, Dr.ஜெகரூபன், ஒலிவியா, ரோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் பிள்ளை (Malaysia), மகேஸ்வரி, நாராயணலிங்கம் (சங்கானை), நவசுந்தரலிங்கம் (Malaysia), மங்கையற்கரசி மற்றும் மகாயோகேஸ்வரி (பரணி பார்மஸி) பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (Canada), உருத்திரசிங்கம் (Pharmacist UK), சுந்தரானந்தா (AI-Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரி, இராஜதுரை, அரியறட்ணம், சிவகாமசுந்தரி, பரமேஸ்வரன், சிவஞானம், சதாசிவம், [illegible]காட்ணம், சுசீலா ஹெற்றி ஆராய்ச்சி, சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், அஸ்வதா[illegible] வைஷ்ணவி, வேல்அபிஷேக், வர்ஷவி, கிரண் சிங்கம், வைஷாலி ஆகியோரின் அன்[illegible] பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2025) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சிங்கம்ஸ் இல்லம்**
**[illegible] ரோட்,**
**[illegible]வில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 30350) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் வயிற்றோட்டம்; முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 4
திடீர் வயிற்றோட்டம் காரணமாக முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
உடுவில் மல்வம் பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சின்ராசா (வயது-63) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
குறித்த நபருக்கு நேற்றுமுன்தினம் வயிற்றோட்டம் ஏற்பட்ட நிலையில், நேற்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

# 906 கிலோ கஞ்சா முருங்கனில் மீட்பு!

மன்னார், செப். 4
முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் இருந்து 906 கிலோகிராம் எடைகொண்ட கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.
மன்னார் பொலிஸ் விசேட பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முருங்கன் பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் இணைந்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.
சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த 5 வருடங்களாக பிரதேச செயலராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் திருமதி உஷா சுபலிங்கத்துக்கு சேவைநலன் பாராட்டு விழாவும், புதிய பிரதேச செயலராக வந்துள்ள எவ். சீ சத்தியஜோதிக்கு வரவேற்பு நிகழ்வும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டன. (எ-25,9)

## 18 நீதிபதிகளை...

களத்தில் பணியாற்றும் சிரேஷ்ட அரசதரப்பு சட்டத்தரணி ஒருவருமே இவ்வாறு மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
எஸ்.எஸ்.கே.விதான, ஏ.எம்.ஐ.எஸ்.அத்தநாயக்க, ஏ.எம்.எம்.ரியால், டீ.பீ.முதுங்கொடுவ, எஸ்.பி.எச்.எம்.எஸ்.ஹேரத், ஜே.கஜனிதிபாலன், டி.எம்.டி.சி.பண்டார, எச்.எம்.பி.ஆர்.விஜயரத்ன, டி.எம்.ஏ.செனவிரத்ன, ஏ.ஏ.ஆனந்தராஜா, ஜி.என்.பெரேரா, ஏ.ஜூடேசன், டபிள்யூ.கே.டி.எஸ்.வீரதுங்க, ஆர்.பி.எம்.டி.ஆர்.வெலிகொடபிடிய, கே.டி.என்.வி.லங்காபுர, டி.எம்.ஆர்.டி.திஸாநாயக்க, எம்.ஐ.எம்.ரிஸ்வி, ஏ.ஜெயலக்ஷி டி சில்வா ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-ம)

## மூளையில்...

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சிறுவனொருவன், மூளையில் ஏற்பட்ட குருதிக் கசிவு காரணமாக உயிரிழந்துள்ளார்.
கேதீஸ்குமார் கார்த்திகேயன் (வயது-7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.
கடந்த 31ஆம் திகதி காலை விளையாட்டில் ஈடுபட்ட அந்தச் சிறுவன், திடீரென நடக்க இயலாது இருந்துள்ளான். இதையடுத்து, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் மயக்கமடைந்துள்ளான். இந்த நிலையில், சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளான்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இராஜதந்திர...

காப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.
ஜனாதிபதி அநுர கச்சதீவுக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டமை தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நேர்காணல் வழங்கியுள்ளார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கச்சதீவு இலங்கையுடையது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த விடயத்தில் இந்தியாவுடன் எமக்கு எந்தவொரு இராஜதந்திர மோதலும் ஏற்படவில்லை. சில அரசியல்வாதிகளே கச்சதீவு தொடர்பில் பல்வேறு கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். அவை தொடர்பில் நாங்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டியதில்லை.
ஜனாதிபதி அநுர கச்சதீவுக்குச் சென்ற விடயத்தில் உள்நோக்கம் எதுவும் இல்லை. ஜனாதிபதி கண்காணிப்பு விஜயத்தையே மேற்கொண்டார். இலங்கைக்கு உரித்தான தீவுக்கு ஜனாதிபதி சென்றதை இவ்வளவுதூரம் சர்ச்சைக்குரியதாக மாற்றவேண்டிய அவசியமில்லை - என்றார். (அ-ம-44)

## செம்மணிப்...

புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 42ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 9 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 7 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 231 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 213 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## கனரக...

துக்கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
இதன்படி, யாழ்ப்பாணம் புதிய செம்மணி வீதிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனங்கள் தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பயணிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் ஏனைய பாரவூர்திகள் காலை 7 மணி முதல் காலை 9 மணி வரையும், நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையும் அந்த வீதியூடாகப் பயணிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பாடசாலைக்குச் செல்லும் நேரத்தைக் கருத்திற்கொண்டே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-20-26)


## பழைய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் தேர்தலை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். ஆனால், எவ்வாறான முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் சர்ச்சையொன்று காணப்படுகின்றது.
தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய அறிக்கை சபையில் நிறைவேற்றப்படவில்லை. எனவே, பழைய முறைமையின்கீழ் தேர்தலை நடத்துவது தொடர்பில் பரிசிலீக்கப்படுகின்றது.
இணக்கம் எட்டப்பட்டால் அது தொடர்பான சட்ட திருத்தம் சபையில் முன்வைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-44)

## மீட்கப்பட்ட...

ஓகஸ்ட் 3ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் செம்மணி மனிதப் புதைகுழியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கள ஆய்வையும், உண்மைகளைக் கண்டறியும் பணிகளையும் முன்னெடுத்தது. இந்த நீண்ட செயற்றிட்டத்தின் அடிப்படையிலும், அதற்கு முன்னரும் பின்னருமான அவதானிப்புகளின் அடிப்படையிலுமே, செம்மணிப் புதைகுழி படுகொலை களுக்கான சாட்சியமாக உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.
இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் சாரம்சமாவது:-
செம்மணியில் இதுவரை மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் அங்கு நியாயமற்ற - நீதிக்குப் புறம்பான படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்பதையே காண்பிக்கின்றன. மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் எவற்றிலும் ஆடைகள் இருக்கவில்லை. அத்துடன், ஒன்றுடன் ஒன்று பிணைந்த நிலையிலும், குறுக்காகவும், ஒழுங்கற்ற நிலையிலும் என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளமை சந்தேகத்தைப் பலப்படுத்துகின்றது. அத்துடன், என்புத் தொகுதிகள் அவதானிக்கப்படும் ஆழமும் வலுவான சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. இவற்றில் அடிப்படையில், அங்கு மனிதப் படுகொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என்ற பொதுவான நிலைப்பாட்டுக்கு வரமுடியும்.
அதன்படி, மனிதப் புதைகுழி விசாரணைகளுக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறையை உருவாக்குதல், மேம்பட்ட தடயவியல் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு நிபுணத்துவத்தைப் பெறுதல், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு மரபணு வங்கியை நிறுவுதல், அரச அதிகாரிகளால் கடுமையான குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடுப்பதற்கான ஒரு சுயாதீன அலுவலகத்தை உருவாக்குதல் ஆகிய பொறிமுறைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக உருவாக்க வேண்டும்.
விசாரணையை திறம்பட முடிக்கவும், என்புக்கூடுகளாக மீட்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதியை உறுதி செய்யவும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமானவை - என்றுள்ளது.
அத்துடன், செம்மணிப் புதைகுழி விடயத்தில் பின்பற்ற வேண்டிய விடயங்களை முன்வைத்து, 16 பரிந்துரைகளையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்துள்ளது. இது தொடர்பான அறிக்கை ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ரயில்...



தில், பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். சுன்னாகம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த சங்கீதா உசானந் (வயது- 44) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
ரயில் வருவதை அவதானிக்காமல் கவனயீனமாகத் தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட அந்தப் பெண்ணை, யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த யாழ்தேவி ரயில் மோதியுள்ளது. இதையடுத்து அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
உயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணைகளைத் தொடர்ந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26-66-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீவெங்கடாசலபதி கோவில் திருவிழா நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, செப்.4
சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் ஸ்ரீவெங்கடாசலபதி கோவில் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரதத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. பெருந்திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ உமாசுதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (எ-25,9)



## "வன்மம்" அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.4
கிரிஷாந்தி கொலை வழக்கு விசாரணைத் தொகுப்பு நூலான "வன்மம்" நூல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம், செம்மணிச் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
தமிழர் வாழ்வுரிமை மையத்தின் ஏற்பாட்டில் அரசியல், சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த்தேசிய அரசியல் செயற்பாட்டாளர் அருட்பணி வசந்தன் நூலை வெளியிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதற்பிரதியைப் பெற்றார். சிறப்புப் பிரதியை படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் உறவினர் ஒருவர் பெற்றுக்கொண்டார். (எ-25,66)

## ரணிலால் தடைப்பட்ட ஐ.தே.க. ஆண்டு விழா!

கொழும்பு, செப்.4
நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒத்திவைக்க அந்தக் கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடிய கட்சியின் நிர்வாகக்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார். ஆண்டு விழாவை இந்த மாதம் பிறிதொரு நாளில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வள்ளிக்கும்மி ஆற்றுகை

யாழ்ப்பாணம், செப்.4
உலக சிவனடியார்கள் திருக்கூட்டத்தினரின் ஈழத்துக்கான பயணத்தின் ஓர் அங்கமாக வள்ளிக்கும்மி ஆற்றுகை நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன வளாகத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் தமிழகத்திலிருந்து வந்துள்ள 65 கலைஞர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.
வள்ளிக்கும்மி என்பது முருகப்பெருமான் மற்றும் வள்ளி ஆகியோரின் வாழ்க்கையை, பிரதானமாக வள்ளியின் பிறப்பு முதல் திருமணம் வரையிலான காலகட்டத்தில் பாடி, கும்மியடித்து ஆடும் ஒரு நாட்டுப்புறக் கலையாகும். இந்தக் கும்மியாட்டம் தமிழகத்தின் கொங்கு மண்டலத்தில் தனிச் சிறப்பாகக் காணப்படுகின்றது. நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (எ-41-66)

## ஊர்காவற்றுறைக்கு புதிய பிரதேச செயலர்



யாழ்ப்பாணம், செப்.4
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளராகப் புதிதாக நியமிக்கப்பட்ட திருமதி வனஜா செல்வரட்ணம் நேற்றுப் புதன்கிழமை யாழ். மாவட்டச்செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் நியமனக்கடிதம் பெற்றுக்கொண்டார்.
நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலர் கை. சிவகரன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) பா.ஜெயகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதேவேளை, திருமதி வனஜா செல்வரட்ணம் நேற்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் தமது கடமையையும் பொறுப்பேற்றுக்கொண்டார். (எ-41-66)

## மோகனதாஸ் சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் தொடர் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், செப். 4
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டத் தொடரொன்று மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.
கடந்த முதலாம் திகதி ஆரம்பித்த இந்தத் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதி வரை இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-40-131)

## புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெற்றது. நாடு முழுவதும் 2 ஆயிரத்து 787 மையங்களில், 3 இலட்சத்து 7 ஆயிரத்து 951 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், செப்.4
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தேர்த்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணிவரை ஆலயச் சூழலில் ஆற்றங்கரை வீதியில் அமைந்துள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றம் ஆகியவை ஏற்பாடு செய்துள்ள குருதிக்கொடை முகாமில் தன்னார்வக் குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் அனைவரும் முன்வந்து குருதிக்கொடை வழங்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (எ-41-66)

**கிரியைகள் செய்து தரப்படும்**
கீரிமலை அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் சாந்திகள், சபிண்டீகரண கிரியைகள் செய்து தரப்படும்.
நகுல உமா குருக்கள் (கீரிமலை ஐயா)
தொடர்பு:- 077 049 8438
(CS/59267) J-1

**சிறுநீரகம் தேவை**
O+ உடையது உடனடியாகத் தேவை. 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்களின் சிறுநீரகம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
076 585 9381
(CR 45836) E

# சதீஷ் கமகேவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, செப்.4
இலஞ்ச மற்றும் பணச்சலவை குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (கலாசாரப் பிரிவு) சதீஷ் கமகேவை எதிர்வரும் 16ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
போதைப்பொருள் வர்த்தகர்கள், குற்றக்குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு சேவைகளைப் பெற பொலிஸ் நிலையத்துக்கு வந்த பொதுமக்களிடமிருந்து ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாவைக் கையூட்டலாக பெற்ற சம்பவம் தொடர்பாக சதீஷ் கமகே அண்மையில் கைது செய்யப்பட்டார். இந்தநிலையில், சந்தேகநபர் சதீஸ் கமகேவின் பெயரில் தனியார் வங்கியொன்றில் திறக்கப்பட்டுள்ள கணக்கொன்றில் ஒரு கோடியே 16 இலட்சம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று கையூட்டல் ஒழிப்பு ஆணைக் குழு சார்பில் நேற்றுமுன்தினம் முன்னிலையான அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.
அதேநேரம், சந்தேகநபருக்கு நெருக்கமான மேலும் பலருக்கு உரித்தான கணக்குகளில் இன்னும் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது என்று தகவல்கள் கிடைத்துள்ளதால், விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படக்கூடும் என்பதைக் கருத்திற்கொண்டு சந்தேகநபரை பிணையில் விடுவிக்கக் கூடாது என இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்திருந்தனர். (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.